அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

* 176 வினா.— திரு. ஆ. கு. சுப்பையா : திரு. சோ. அழகர்சாமி : திரு. கே. விநாயகம் : } மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் 'பென்ஷன்' தொகை விகிதத்தை அதிகரிக்கும் உத்தேசம் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, in view of the rising cost of living and the spiralling prices of commodities, will the Government reconsider, whether anything can be done in the matter of granting of pensions or some other kind of aid to the pensioners?

THE HON. THIRU C. N. ANNADURAI : This is about enhancement of pension and not about the grant of pensions. Pensions are being granted even now.

திரு. சோ. அழகர்சாமி : முன்னாள் டிஸ்ட்ரிக்ட் போர்டில் வேலை பார்த்த ஆரம்ப ஆசிரியர்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் பென்ஷன் கோரி மனு அனுப்பியிருந்தும் இதுவரையில் கிடைக்காமல் இருக்கிறது. ஆசிரியர்கள் ஓய்வு பெற்றவுடனே பென்ஷன் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதுபற்றிய விவரங்கள் எல்லாம் இப்போது என்னிடத்தில் இல்லை. அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ந. தருமலிங்கம் : ஓய்வுபெற்ற தமிழக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற ஓய்வு ஊதியத் தொகைக்கும், ஓய்வுபெற்ற மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற ஓய்வு ஊதியத் தொகைக்குமிடையே உள்ள தொகை வேறுபாடு எவ்வளவு? இந்த வேறுபாட்டை நீக்கி ஓய்வுபெற்ற மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குகிறமாதிரி ஓய்வுபெற்ற தமிழ்நாடு அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்குவதுபற்றிய செயற்குறிப்பு ஏதாவது உண்டா? அப்படிப்பட்ட செயற்குறிப்பு இருக்குமானால் அதன் முழு விவரமும் அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்தக் கேள்வி பென்ஷனை அதிகப்படுத்த வேண்டும் என்பதுபற்றியே தவிர அதன் வகை பற்றியல்ல. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்து தரப்படும்.

1967 ஜூலை 6]

திரு. கரு. சீமைச்சாமி : பென்ஷன் வாங்கும்போது அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதிகாரத்தில் இருக்கும்போது எவ்வளவு அதிகாரம் செலுத்தினார்களோ, பென்ஷன் வாங்கவரும் போது தண்ணீர்கூட கொடுக்கப்படுவதில்லை. இதையெல்லாம் உத்தேசித்து பென்ஷனை எம்.ஓ. மூலம் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பென்ஷன் வாங்குகிறவர்கள் அப்படி ஒன்றும் கோருவதாகத் தெரியவில்லை.

திரு. எ. பட்டாபி நாயுடு : ஜில்லா போர்டுகள் ஒழிக்கப்பட்ட பிறகு அவற்றில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு பென்ஷன் கொடுத்து வருகிறார்கள். அதே ஜில்லா போர்டில் உயர்நிலைப் பள்ளிகளில் வேலை செய்து வந்த ஊழியர்களுக்கு, அதாவது குமாஸ்தாக்களுக்கு பென்ஷன் கொடுப்பதில்லை. அதைச் சற்று கவனித்து ஆவன செய்ய இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அங்கத்தினர் அவர்கள் எழுப்பிய பிரச்னை வருகிறபோது கவனிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பென்ஷனை அதிகப்படுத்த உத்தேசமில்லையென்று சொன்னாலும் பஞ்சப்படியை சம்பளத்துடன் சேர்த்து பென்ஷன் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அப்படி ஒரு ஏற்பாட்டைப்பற்றி இந்த சர்க்கார் இப்போது ஒன்றும் கருத்தில் கொள்ளவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, while I am perfectly aware that pensions are being granted to our retired Government servants, the question is whether the present Government will reconsider the enhancement of the pension in view of the high cost of living and also whether the Government are aware that these pension rates had been decided upon some 30 or 40 years ago and that it is not humane to continue to give that kind of pension as they find it very difficult to make both ends meet. Will the Government reconsider it?

THE HON. THIRU C. N. ANNADURAI : Always the Government is concerned about the ratio between the humanitarian aspect and the financial aspect.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நீலகிரி போன்ற மலைப்பகுதிகளில் பணி புரியும் சர்க்கார் ஊழியர்களுக்கு ஹில் அலவன்ஸை உயர்த்திக் கொடுக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது பென்ஷனைப் பற்றிய கேள்வி.

திரு. பி. வேலுசாமி : சர்க்காரிலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள்—கெஸட் பதிவற்றவர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலர் ஓய்வு பெற்ற பின்னர் தனிப்பட்ட தொழிற்சாலைகளில் உத்தியோகம்

பார்க்கிற காலத்தில் அவர்களுடைய பழைய செல்வாக்கைப் பயன் படுத்தி அங்குள்ள தனி முதலாளிகளுக்கு ஆக்கம் கொடுப்பதற் காக செயல்படுவதாகக் காணப்படுகிறது. அதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பென்ஷன் வாங்கு கிறவர்களுக்கு உள்ள கஷ்டங்களைப் பற்றிய கேள்வி இது. அதில் சில பேர்கள் அதிர்ஷ்டக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதை அங்கத்தினர் கவனப்படுத்துகிறார்.

DR. H. V. HANDE : Sir, the previous Government refused to consider even the necessity or possibility of enhancing the pension even though we have been telling them for the past five years. Also, in view of the fact that pension is calculated only on the last three years' average income which means it would be very much less than in the last year will this Government at least give us an assurance in this House that though they may not enhance the pension, they will appoint a small commission to examine the question of commitment to this Government on account of the enhancement of pension?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I have not yet gone fully into the question though I have had some discussions with several pensioners of the City of Madras. I will certainly look into the question but it ought not to be considered as an assurrance.

திரு. நா. காசிராமன் : இந்த பென்ஷன் திட்டத்தில் குறைந்தது இவ்வளவாவது பென்ஷன் கிடைக்க வேண்டும், அதிகபட்ச அளவிற்கு இவ்வளவிற்கு மேற்படக்கூடாது என்ற திட்டத்தை வகுத்து எல்லோருக்கும் கூடுமானவரையில் நல்லவகையில் பென்ஷன் கிடைக்க சர்க்கார் திட்டம் கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பென்ஷன் வாங்கு வதில் பென்ஷன்காரர்களே சில முறைகளைக் கேட்கிறார்கள். அவர்கள் கேட்கிற சிலமுறைகளையும் சர்க்கார் அனுசரித்து கூடுமானவரையில் அந்தப் பென்ஷன் தொகை அவர்களுக்கு வசதியாக இருக்கிற முறையில் அமைந்திட அவர்களோடு கலந்து பேசுவதில் இந்த சர்க்காருக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

* 177 வினா—*திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :* மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பென்ஷனர்களுக்குத் தரப்படும் அகவிலைப்படியை உயர்த்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இல்லை.